வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

1933 — 1983

# பொன்விழா மலர்

# GOLDEN JUBILEE SOUVENIR

Northern Province
Teachers' Provident Society Ltd.,
JAFFNA.
March, 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Finance For Your Small & Medium Scale Industrial Units**

*Contact us for: .*

**Loans with low Interest and Grace Periods for Repayment**

V

# Commercial Bank of Ceylon Ltd.,

**JAFFNA.**

**The Bank to Grow with.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

# பொன்விழா மலர்

## 1933 — 1983

# GOLDEN JUBILEE SOUVENIR

March 1984

**Northern Province Teachers' Provident Society Ltd.**

**JAFFNA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Office Address*:

**Northern Province Teachers' Provident Society Ltd.**

12, Kadaichamy Road,
Neeraviady,
JAFFNA.

"Each for All
All for Each"

காரியாலய விலாசம்:

**வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்**

12, கடையிற்சுவாமி வீதி
நீராவியடி
யாழ்ப்பாணம்

"ஒருவருக்குப் பலர்,
பலருக்கு ஒருவர்"

மலர் ஆசிரியர்கள்:
1. திரு. சே. சிவராஜா
2. திரு. அ. பஞ்சாட்சரம்

நிர்வாகசபையாரோடு இணைந்து இயங்கிய பொன்விழாக் குழுவினர்:

1. திரு. W. N. தேவகடாட்சம்
2. திரு. S. கனகரெத்தினம்
3. திரு. V. இராமகிருஷ்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது சங்கம் தொடங்கப்பெற்று அரை நூற்றாண்டுகள் பூர்த்தியாகின்ற வேளையில்; அதன் பொன்விழாவைக் கொண்டாட வேண்டுமென்ற நிர்வாக சபையின் தீர்மானத்தைப் பொதுச் சபையும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. எனினும்; கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக உரிய காலத்தில் இதனைக் கொண்டாட முடியவில்லை. காலம் தாழ்ததியாவது 1984-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ம் திகதி இதனைக் கொண்டாடுவதற்கு ஆண்டவன் அருள் பாலித்துள்ளது மகிழ்ச்சிக்குரியதே.

எமது எதிர்கால ஆசிரியர் சமுகம், எமது சங்கத்தின் பூர்வாங்கத்தையும், வளர்ச்சியையும் அறியமுடியாது போய்விடுமோ என்ற ஐயத்தினாலும் நமது எதிர்கால சந்ததியினருக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கவேண்டுமென்ற காரணத்தினாலும் இப்பொன்விழா மலரை வெளியிடுகின்றோம்.

சிக்கனமே எமது நோக்கமாக இருப்பதினால்; பல வர்த்தகப் பிரமுகர்களை நாடினோம். அவர்கள் விளம்பரங்களைத் தந்து எமக்கு அளித்த ஆதரவுக்கு எமது நன்றி உரித்தாகும்.

விடயதானங்களையும், ஆசிச்செய்திகளையும் தந்து எமக்கு உற்சாகமூட்டிய பெரியார்களுக்கும் தமது புகைப்படங்களைத் தந்து வெளியிட அனுமதித்த முன்னாள் நிர்வாகிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம்மலர், எதிர்கால ஆசிரியர்களுக்கு; வழிகாட்டியாக அமைவதோடு இச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் மேலும் உரமிடுமென நம்புகின்றோம்.

இம்மலரை எதிர்கால ஆசிரிய சமூகத்தினருக்கு சமர்ப்பித்து இச்சங்கத்தை மேலும் வளர்த்துச் செல்லும்படி வேண்டி, விடைபெறுகின்றோம்.

வணக்கம்

12, கடையிற்சுவாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

18-3-1984

மலர் ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே........


1. வ. மா. ஆ. ச. சங்கத்தின் அரைநூற்றுண்டு வளர்ச்சி
— செயலாளர் திரு. சே. சிவராஜா — பொன்விழா அறிக்கை
2. பொன்விழா ஆண்டு 1983 — நிர்வாகசபை
3. ஆசிச் செய்தி — வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை
4. வாழ்த்துச் செய்தி — வடமாநிலப் பிரதம கல்வி அதிகாரி
ஜனுப் எம். எம் மன்சூர்
5. வாழ்த்துச் செய்தி — வடமாநிலப் பிரதம கல்வி அதிகாரி
திரு. வெ. சபாநாயகம்
6. வாழ்த்துச் செய்தி — மூதூர் பிரதேச கல்வி அதிகாரி
ஜனுப் ஏ. வி. முஹம்மது
7. ஆசிச் செய்தி — திரு. இ. சபாலிங்கம்
8. பொன்விழாவில் கௌரவிக்கப்படுபவர்கள் பட்டியல்
9. வாழ்த்துமடல் — திரு. என். பாலகிருஷ்ணன்
10. ஸ்தாபக வருட நிர்வாகசபை — 1933
11. Golden Jubilee Message from the President Mr. T. Visvanathan
12. முன்னுள் நிர்வாகிகள் அட்டவணை 1933 — 1983
13. முன்னுள் உபதலைவர்களும் உபசெயலாளர்களும் 1933 — 1983
14. ஆசிரியரும் பொருளாதாரமும் — திரு. ந. சபாரத்தினம்
15. வ. மா. ஆ. ச. சங்கம் — திரு. க. நல்லதம்பி
16. செய்தி — திரு. க. சுப்பையா
17. ஆசிச் செய்தி — திரு. கா. வைரமுத்து
18. N. P. T. P. S. Its Beginnings — Mr. K. Nesiah
19. நன்றிமடல் — திரு. ச. அம்பிகைபாகன்
20. பொன்விழாச் செய்தி — சங்கத்தலைவர் திரு. து. விசுவநாதன்
21. ஆசிமடல் — திரு. மு. பொன்னம்பலம்
22. வாழ்த்துரை — திரு. இரா. செல்வராசா
23. புதிய அங்கத்தவர் வரைபடம்
24. வழங்கிய சகாயம் ,,
25. சங்க இருப்பு ,,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் அரை நூற்றுண்டு வளர்ச்சி

செயலாளர் **திரு. சே. சிவராஜா அவர்களது** பொன்விழா அறிக்கை

ஒரு சங்கம் அரை நூற்றுண்டைத் தாண்டி வெற்றிகரமாக இயங்குகின்ற தென்முல் அது மகிழச்சிக்குரியதும் பெருமைப்படத்தக்கதுமாகும். 1933-ம் ஆண்டு யூலைத் திங்கள் தோன்றிய எமது சங்கம் பலவித மேடு பள்ளங்களைத் தாண்டி; இப் பொழுது பீடுநடைபோடுகின்ற நிலையில், எம்மை எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்து கின்றது. 1983 யூலையில் நடைபெற்ற இனக் கலவரங்களினுல், எமது பொன் விழாவை கொண்டாட முடியாமல் போய்விட்டது. இத்தகைய துர்பாக்கிய நிலை 1958ல் எமது வெள்ளி விழாவின் போதும் ஏற்பட்டது, விசனத்திற்குரியதாகும். எனி னும், இன்றைய நிலையில் சில மாதங்கள் தாழ்த்தியாவது பொன் விழா மலரைவெளி யிட்டும், விழாவைக் கூட்டியும் பெருமகிழ்வடைகின்ருேம்.

**சங்கத்தின் ஆரம்பம்:-**

சுமார் அரை நூற்றுண்டுக்கு முன்; எமது ஆசிரியர் நிலை பெரிதும் பரிதாபத்திற் குரியதாகவே இருந்தது. அனேக மானவர் அரசாங்க சேவையற்றவர்களாக; ஒழுங்கான வேதனமோ, சீரான பாதுகாப்போ; இளைப்பாற்று வேதன (பென்சன்) வசதியோ; விதவைகள் அனுதைகள் வேதனமோ கிடையாதநிலை. சுயபாஷா ஆசிரியரின் நிலையோ மேலும் மோசமானது. இப்படியான காலகட்டத்தில், ஆசிரியர்களின் இருளைப்போக்கும் விடி வெள்ளியாகத் தோன்றியது எமது சங்கம்.

பாதுகாப்பற்ற நிலையில் இருந்த ஆசிரிய சமூகத்தினரிடையே தன்னம்பிக்கையை யும் ஒற்றுமையையும் வளர்த்து: அவர்களிடம் சேமிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்துவது இன்றியமையாத தாயிருந்தது ஆங்கில, தமிழ் ஆசிரியர் என்ற பேதமின்றி பரஸ்பரம் உதவி செய்யும் சங்கமொன்றை உருவாக்குவது அவசியமென எமது முன்னுேடிகள் உணர்ந்து செயல்பட்டனர். இவர்களின் அயராத உழைப்பினுல் 1933ம் ஆண்டு, மார்ச் மாதம் 25ம் திகதி திருவாளர் A. M. K குமாரசுவாமி தலைமையில், யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரிய கூட்டமொன்று கூட்டப்பட்டு, இச் சங்கம் அமைப்பதற்கான எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டன. இச் சங்கம் சகல ஆசிரியர்களையும் உள்ளடக்கி யதாகவும்; பதியப்பட்ட ஆசிரியர் அனைவருள்ளும் 30 வயதுக்குட்பட்டவர்கள் அங்கத் தவராக தகுதியுடையவரெனவும் தீர்மானிக்கப்பட்டது. சங்கம் தொடங்கி முதல் மூன்று மாதங்களுக்குள் 50 வயதுக்குட் பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்,

ஆரம்பத்தில் சங்கவிதிகள்; மேல் நாடுகளில் இயங்கிவரும் இத்தகைய சங்கங்க ளின் விதிகளைத் தழுவி அனுபவம் வாய்ந்த பெரியோர்களால் ஆங்கிலத்தில் உரு வாக்கப்பட்டன. நாளடைவில் இவை தமிழிலும் ஆக்கப்பட்டன. காலத்திற்குக் காலம், சங்கத்தின் வளர்ச்சி கருதி பொதுச்சபையின் தீர்மானப்படி விதிகள் மாற்றமடைந் துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கத்தின் வளர்ச்சி:-**

1953ம் யூலை மாதத்தில் இச்சங்கத்தின் ஆரம்பப் பொதுக் கூட்டம் நடை பெற்று, இயக்குனர் சபையொன்று தெரிவு செய்யப்பட்டது. இந்நிர்வாக சபையில் கடமையாற்றியோர் விபரம் வேறொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இச் சங்கம் ஆரம்ப மாகிய நாலு வருடங்களிலேயே 300 அங்கத்தவர்களைக் கொண்ட ஸ்தாபனமாக அமைந்தது.

**சங்கத்தின் நோக்கம்:-**

அங்கத்தவர்களிடையே சேமிப்பை வளர்ப்பதும் அங்கத்தவர்களுக்கு கடன் வசதியளிப்பதும், இளைப்பாறும் போது சகாயம் வழங்குவதும், இறக்க நேரிடும் அங்கத்தவர்களின் பின்னுரித்தாளருக்குச் சகாயம் வழங்குவதுமே, இதனது தலையாய குறிக்கோளாகும். இச் சங்கம் கடந்த அரை நூற்றாண்டாக அங்கத்தவர்களின் குடும் பங்களுக்கு ஆபத்தில் உதவும் கலங்கரை விளக்கமாக இருந்து வந்திருக்கிறதென்றால் மிகையாது.

ஆரம்பத்தில் 1ம், 2ம், 3ம் வகுப்பு அங்கத்தவர்கள் என மூவகைப் பிரிவினர்கள் முறையே, 4, 2, 1 என மாதாந்தம் கட்டுபவர்களாகச் சேர்க்கப்பட்டனர். நாளடவில் 1ம் பிரிவுல் மட்டுமே அங்கத்தவர்கள் சேர்க்கப்படலாயினர். மேலும் சகாயத்தை கூட்டும் முகமாக மேலதிக வைப்புப் பணமாக மாதாந்தம் ரூபா 6/- அங்கத்தவர் களிடையே அறவிட்டு அதன் $2\frac{1}{2}$ மடங்கைப் பெறும் வாய்ப்பை 1978ல் நிர்வாகசபை யினர் ஏற்படுத்தியுள்ளனர். மேலும் பல முன்னேற்றமான விதி மாற்றங்களை எதிர் நோக்கியுள்ள இச் சங்கம், பாரிய வளர்ச்சியையும் எதிர்பார்த்து நிற்கின்றது.

எமது சங்கம் வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம் என்ற பெயரைப் பூண்ட போதிலும், இனம், மொழி: சமயம், பால் என்ற வேறுபாடின்றி, இந்த நாட்டில் பரந்து விரிந்துள்ள ஆசிரியர் சமுதாயத்திற்கு சேவை செய்து வந்துள்ளது. இந்நாட்டி லுள்ள ஆசிரியர்களுக்கான சகாயநிதிச் சங்கங்களுக்கிடையே, பழமை வாய்ந்ததும், அதிக அங்கத்தவர்களைக் கொண்டதுமான சங்கம் இதுவேயாகும்.

**வளர்த்த பெரியார்கள்:-**

பொன் விழாக்காணும் இந் நிலையில் இச்சங்கத்தை வளர்ப்பதற்காக அரும்பணி யாற்றிய முன்னுள் நிர்வாகிகளாகிய பெரியார்களை நினைவு கூர வேண்டியது எமது தலையாய கடமையாகும். இவர்களில் திருவாளர்கள் J. C. அமரசிங்கம், A. C. சுந் தரம்பிள்ளை, J. W. அருட்பிரகாசம், S. P. இராசையா, S. சுவாமிநாதன், S. அம் பிகைபாகன், P. தம்பு, C. வைரமுத்து, M. வைத்திலிங்கம், K. நல்லதம்பி, M. பொன்னம்பலம், K. சுப்பையா, இரா செல்வராஜா, போன்றோரது அயராத உழைப்பே எமது சங்கத்தின், வளர்ச்சியாக அமைந்ததெனலாம், இவர்களுக்கு சங்கத் தின் நன்றி என்றும் உரியதாகும்.

கடந்த சில வருடங்களாக தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள திரு. து. விசுவநாதன் அவர்களது அயராத உழைப்பினாலும் தொடர்ந்த சேவையினாலும், எமது சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சியுடையதாக மட்டுமல்லாமல், ஸ்திரமானதும், உன்னதமானதுமான நிலையையும் எய்தியுள்ளதென்றால் அது புகழாரமாகமாட்டாது. அன்னாரது சேவை தொடர்ந்தும்; எமது சங்கத்திற்கு கிடைக்குமென நம்புகின்றேன்.

தனாதிகாரியாக அரும்பணியாற்றிவரும் திரு. செ. குணபாலசிங்கமவர்களது உண்மையான உழைப்பும் உறுதியான நிலையும், எமது சங்கத்தின் நிதியை பாது காப்பாக வைத்திருக்க உதவின என்றால் மிகையாது.

என்னுடன் ஒன்றிணைந்து இயங்கிவரும் இவ்விருவருக்கும், உதவியளித்து வரும் உபதலைவர் திரு. த. இராஜேந்திரத்திற்கும் உப செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரத் திற்கும் எனது சார்பிலும் சங்கத்தின் சார்பிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**சங்கத்தின் காரியாலயம்:-**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நீராவியடி 12, கடையிற்சுவாமி வீதி, இல் லத்தில் எமது சங்கக் காரியாலயம் தற்போது இயங்குகின்றது. ஆண்டுக் கூட்டங்களையும், நிர்வாக சபைக் கூட்டங்களையும் ஆரம்பகாலங்களில் யாழ் மத்திய கல்லூரியிலும், பின்பு அனேக வருடங்கள் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் நடத்துவதற்கு அனுமதி அளித்த இக் கல்லூரி அதிபர்களுக்கும், பிராந்திய கல்விப்பணிப்பாளர்களுக்கும் எமது யைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இச் சங்கத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்த பெரியார்களுக்கும், தற்போதைய நிர்வாக சபையினருக்கும், பொதுச் சபையினருக்கும் நன்றி கூறுவதோடு, எமது சங்கம் இன்னும் பல நூற்றாண்டுகள் தழைத்து; எதிர்கால ஆசிரியர் சமுகத்திற்கு மேன்மேலும் பணிபுரிய வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

**வளர்க வ. மா. ஆ. ச. ச.**

12, கடையிற் சுவாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சே. சிவராஜா
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

# பொன்விழா ஆண்டு 1983 — நிர்வாகசபை

N. P. T. P. S.

# Golden Jubilee Year - Executive Committee

தலைவர்

திரு. து. விசுவநாதன்

உபதலைவர்

திரு. த. இராசேந்திரம்

( 30-9-83 முதல் திரு. அ. தம்பிப்பிள்ளை )

செயலாளர்

திரு. சே. சிவராஜா

( 10-11-83 முதல் திரு. அ. பஞ்சாட்சரம் )

உபசெயலாளர்

திரு. அ. பஞ்சாட்சரம்

( 10-11-83 முதல் திரு. V. M. குகானந்தா )

பொருளாளர்

திரு. செ. குணபாலசிங்கம்

( 10-11-83 முதல் திரு. சே. சிவராஜா )

செயற்குழு

ஜனப். S. M. M. இப்ருகிம்
திரு. அ. தம்பிப்பிள்ளை
,, A. I. சின்னையா
,, த. சிதம்பரப்பிள்ளை
,, தி. செல்வராஜா
,, S. P. வில்வராஜா
,, ப. இராசரெத்தினம்
,, க. சிற்றம்பலம்
,, நா. நடராசா
,, சே. சோமசுந்தரம் ( 21-9-83 வரை )
,, C. S. சுப்பிரமணியம் ( 1-10-83 முதல் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. மா. ஆ. ச. ச. பொன் விழா ஆண்டு — நிர்வாகசபை — பொன் விழாக் குழுவினருடன்

N. P. T. P. S. Golden Jubilee Year – Executive Committee with the Jubilee Members



*Seated (L. to R.)* Ms. S. M. M. Ibrahim. A. Thambipillai, C. Gunapalasingam (Treasurer), T. Visvanathan (President) S. Sivaraja (Secretary), T. Rajendram (V. President), A. Panchadcharam (Asst. Secy.)

*Standing first Row (L. to R.)* Ms. N. Nadarajah, T. Selvarajah, S. Somasundaram, S Kanagaretnam, T. Sithamparapillai. C. S. Subramaniam & A I. Chinniah.

" *second Row (L. to R.)* Ms. P. Rajaretnam, V. M. Kuganandah, S. Sittampalam, S. P. Vilvaraja & W. N. Thevakadadcham. Absent: Mr. V. Ramakrishna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா ஆண்டு 1983 GOLDEN JUBILEE YEAR

தலைவர்

'சகாயமணி' திரு. து. விசுவநாதன்

நிர்வாகிகள்

OFFICIALS



Mr. T. Visvanathan B. Sc, Dip-Ed.,
( President 1978 — )
Jaffna College

செயலாளர்
திரு. சே. சிவராஜா



Mr. S. Sivaraja B. Sc. Dip-Ed.,
( Secretary ( 1973 — 1983 )
Jaffna Hindu College

தனாதிகாரி
திரு. செ. குணபாலசிங்கம்



Mr. C. Gunapalasingam B. A. Dip-Ed.,
( Secretary 1968 — 1972 )
( Treasurer 1973 — 1983 )
Vaidyeshwara Vidyalaya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்

## திரு. ம. சிமியாம்பிள்ளை அவர்கள்

# வழங்கிய ஆசிச்செய்தி

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச்சங்கம் தனது பொன் விழாவைக் கொண்டாடும் வேளையில், அதன் செயலாளர் திரு. சே. சிவராஜாவினது வேண்டுகோளுக்கிணங்க இவ்வாசிச் செய்தியை அளிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியர்களுக்குச்சீரான ஓய்வூதியமோ, சேமலாபநிதியோ இல்லாத காலத்தில், ஆசிரியர்களின் பிற்கால நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம், கடந்த அரை நூற்றுண்டுகாலமாக ஆசிரியர் சமுகத்திற்கு தனது சேவையை ஆற்றிவந்துள்ளது. மேலும் இச்சங்கம் சாதி சமய வேறுபாடின்றி இம்மாகாணத்திற்குள் மட்டுமல்லாது, நாடு முழுவதுமளாவிய மட்டத்தில், சகல ஆசிரியர்களுக்கும் சேவையாற்றி வந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும். சேரும்போது ஆசிரியராக இருந்து; பின்பு வேறு தொழில்களை மேற்கொண்டோரும் இதில் தொடர்ந்து அங்கம் வகித்து வருகின்றனரென அறிகின்றேன். ஆசிரியர் இளைப்பாறும் போதும், மரணிக்கும்போதும், பணஉதவி பெறுவது, ஆறுதலளிக்கும் செய்தியாகும்.

இச்சங்கம்; தொடர்ந்து, பல்லாண்டுகள் வெற்றியுடன் இயங்கி, ஆசிரியர் சமுகத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாநில பிரதம கல்வி அதிகாரி

## ஜனப் எம், எம். மன்சூர் அவர்கள்

# வழங்கிய வாழ்த்துச்செய்தி

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் பொன்விழாவை யொட்டி இந்த வாழ்த்துச்செய்தியை வெளியிடுவதில் பேருவகை யடைகின்றேன்.

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம் கடந்த அரைநூற்றுண்டுகால மாக இந்நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு, இளைப்பாறும்போது சகாயம் வழங்குவ தன்மூலம் அருந்தொண்டாற்றி வந்துள்ளது. இச்சங்கத்தில் நாடுமுழுவதுமுள்ள ஆசிரியர் அங்கம் வகிக்கக்கூடியதாக இருப்பது, ஆசிரியர் சமுகத்தை ஒன்று படுத்துவது போலாகும் அங்கத்தவரிடையே, சேமிப்பை வளர்ப்பதும், இளைப் பாறும்போது சகாயம் வழங்குவதும், இச்சங்கத்தின் தலையாய நோக்கமாகும். இதனல், ஆசிரியர் சமுகம், பெருநன்மை அடைவதோடு, கூட்டுறவு மனப் பான்மையையும் வளர்த்து வந்துள்ளது.

இச்சங்கத்தின் முன்னுள் நிர்வாகிகளைப் பாராட்டுவதோடு; தற்போதைய தலைவர் திரு. து. விசுவநாதன், செயலாளர் திரு. சே. சிவராஜா தனதிகாரி திரு. செ. குணபாலசிங்கம் ஆகியோரது சேவைகளையும் பாராட்டுகின்றேன்.

இச்சங்கம் தொடர்ந்து பல அரைநூற்றுண்டுகளைக்கண்டு, ஆசிரியர்களுக்கு சேவைசெய்ய வேண்டுமென இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாநில பிரதம கல்வி அதிகாரி

திரு. வெ. சபாநாயகம் அவர்கள்

## வழங்கிய வாழ்த்துச் செய்தி

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் பொன்விழாவை, யொட்டி இச்செய்தியை விடுப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர்கள் இளைப்பாறும் போது சகாயம் பெறும் வகையில் வகுக்கப்பட்ட இச்சங்கம், காப்புறுதி போன்றும் செயற்படுவது பாராட்டப்பட வேண்டியதாகும். மேலும், சகல ஆசிரியர்களும் இச்சங்கத்தில் சேரும் வாய்ப்பிருப்பது, இதனது பரந்த சேவையை எடுத்துக்காட்டுவதாகும்.

இச்சங்கம் மேன் மேலும் வளர்ச்சியடைந்து பல்லாண்டுகாலம் ஆசிரிய சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் பிரதேச கல்வி அதிகாரி

ஜனாப் ஏ. வி. முஹம்மது அவர்கள்

# வழங்கிய வாழ்த்துச்செய்தி

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம் தனது 60-ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மூத்த ஒரு அங்கத்தவன் என்ற கோதாவில் திருக்கோணமலை மாவட்டத்தின் சார்பாக ஒரு முஸ்லிம் என்ற நிலையில் எனது மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சங்கம் சாதி சமய வேறுபாடு துளிகூட இல்லாத நிலையில் சேவையை நோக்காகக் கொண்டு சகல இன மக்களுக்கும் சிறந்த சேவையாற்றியதோடு பாரபட்சமின்றி பிரதி நிதித்துவம் கொடுத்து எல்லோரையும் மகிழ்வித்து பயன்பெறச் செய்ததில் சிரேட்டமுடையது.

இந்நாட்டில் எத்தனையோ சங்கங்கள் தோன்றி, காலக்கிரமத்தில் விலாசம் இல்லாது மடிந்தது சரித்திரம் கண்ட உண்மை. அவ்வாறின்றி இச்சங்கம் இறுமாப்போடு இற்றைவரை இமயமலைத் தீபம்போன்று வீர நடை போடுவது யாருமறியாததில்லை. இத்தனை காணயமும், நம்பிக்கையும் கொண்ட இச்சங்கம் இந்நாட்டில் நீண்டகாலம் நிலவி ஆயிரமாயிரம் அங்கத்தவர்கள் கொண்டதாகத் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்பது எனது அவா.

எறும்பானது தனது விடா முயற்சியால் சிறு சிறு துகள்களாக தானியத்தைச் சேகரித்துப் பெரிய குவியலை உண்டாக்குவதுபோல இச்சங்கம் சிறிய தொகையை அறவிட்டு, பெரிய தொகையை அங்கத்தவர்களுக்குக் கொடுக்கும் தன்னிகரில்லாத ஸ்தாபனமாக விளங்குகிறது மேலும் வருடாந்தம் சங்க நடைவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பொதுக்கூட்டம், உத்தியோகத்தர் தெரிவு ஆதியாம் செயற்பணிகளைச் செவ்வனே செய்வதின் மூலம் அங்கத்தவர்களுக்குப் புத்தூக்கமளித்து நம்பிக்கையையும், நன்லெண்ணத்தையும் பெற்றுள்ளது.

தொடர்ந்து இதன் சேவை திசெங்கணும் பரவ வேண்டுமென வாழ்த்தி விடை பெறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியாளரும், யாழ். இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய அதிபருமான

திரு. இ. சபாலிங்கம் அவர்கள் வழங்கிய

## ஆசிச்செய்தி

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு விழாவின் பொருட்டு அச் சங்கத்தினர் வெளியிடும் மலருக்கு என்னையும் ஒரு செய்தி அனுப்ப வேண்டுமென்று பணித்தனர். யான் பள்ளிக்கூட மாணவனாக இருந்த காலத்திலே இச் சங்கம் தொடங்கியது. நான் ஒரு போதும் இச் சங்கத்திலே ஒரு அங்கத்தவனாக இருக்கவில்லை. அப்படி இருந்தும் ஒரு ஆசிச் செய்தி அனுப்புவதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன். எம்மதிப்பிற்குரிய முன்னோர்கள் ஆசிரியர்கள் ஆசிரியர்களுக்கு உதவவேண்டும் என்ற ஒரு நோக்குடனே இச்சங்கத்தை அமைத்தார்கள். ஆசிரியர்களுக்கு இப்பவோ முன்னையோ ஒரு போதும் அவர்கள் பணி புரியும் வேலைக்குச் ஏற்ற சம்பளம் கொடுபடவில்லை. இச்சங்கம் ஆசிரியர்களுக்கு அவர்கள் இளைப்பாறும் வேளையில் உதவி புரியும் நோக்கோடு ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஐம்பது வருட கால வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களுக்கூடாக ஆசிரியர்களின் நிர்வாகத் திறமையும், சுய நம்பிக்கையும், நேர்மையும் தியாக சிந்தனையும் கொண்டதால்எல்லா இன்னல்களையும் தாண்டி இப்போது ஐம்பதாம் ஆண்டு வெற்றி விழாவைக் கொண்டாடுகிறது. இதன் முன்னேற்றத்துக்கு அயராது உழைத்த நிர்வாகஸ்தர்களுக்கு ஆசிரிய உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

# பொன் விழாவில் கௌரவிக்கப்படுபவர்கள்

I. சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த
தலைவர் திரு. து. விசுவநாதன் அவர்களுக்கு
" சகாயமணி " பட்டமளித்துக் கௌரவித்தல்.

II. சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிய
முன்னாள் நிர்வாகிகளைப் பாராட்டுதல்

பாராட்டிக் கௌரவிக்கப்படுபவர்கள் :

1. திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் (முன்னாள் தலைவர்)
2. திரு. கா. வைரமுத்து ,, (முன்னாள் செயலாளரும் தனாதிகாரியும்)
3. திரு. க. சுப்பையா ,, (முன்னாள் செயலாளரும் தனாதிகாரியும்)
4. திரு. க நல்லதம்பி ,, (முன்னாள் தலைவர்)
5. திரு. மு. பொன்னம்பலம் ,, (முன்னாள் தலைவர்)
6. திரு. இரா. செல்வராசா ,, (முன்னாள் தலைவர்)
7. திரு. த. இராசேந்திரம் ,, (இளைப்பாறும் உப.தலைவர்)
8. திரு. சே. சோமசுந்தரம் ,, (இளைப்பாறும் நி.ச. உறுப்பினர்)

18—3—1984

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத்தலைவர்

திரு. என். பாலகிருஷ்ணன் அவர்கள்

# வழங்கிய வாழ்த்து மடல்



வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆசிரியர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பலவழிவளில் உழைத்து வந்துள்ளது. அதனை நினைவுகூரும் முகமாக பொன்விழா மலர் ஒன்றினை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

இச்சங்கம் ஆசிரியர்களுக்கு வேண்டிய நேரத்தில் நிதிஉதவி செய்வதற்காக சேமிப்புத்திட்டம் ஒன்றினை அமுல்படுத்தியுள்ளது வரவேற்கத்தக்கதொன்றாகும். அங்கத்தவர்கள் தம் மாதாந்த வருமானத்தில் ஒருபகுதியை எதிர்காலத் தேவைகளிற்காக சேமித்து வைப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதோடு சங்கத்தின் விதிகளுக்கமைய அச்சேமிப்பில் ஒரு பகுதியை வேண்டிய நேரத்தில் பெறுகின்ற வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன், தம் சேமிப்பை தமது வாரிசுக்கோ அல்லது உரிமையாளருக்கோ மாற்றம் செய்யும் உரிமையையும் வழங்கியுள்ளது. இச்செயற்பாடுகள் மொத்தப் பொருளாதார நலனை மேம்படுத்த உதவுவதோடு மக்கள் தம் சேமிப்பை முதலிடுவதற்கான சூழ்நிலையையும் உருவாக்குகின்றது.

இச்சங்கம் தொடர்ந்தும் தன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் சேவைகளை விஸ்தரித்து அங்கத்தவர்களுக்கு பலவகையிலும் உதவ வேண்டும் என விரும்பி வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நிற்க: முன்னாள் அலுவலர்

# வ. மா. ஆ. ச. சங்கம்

## ஸ்தாபக வருட நிர்வாகசபை—1933

| | |
|---|---|
| தலைவர்: | திரு. J. W. அருட்பிரகாசம் B. A. |
| உப-தலைவர்: | திரு. S. சுவாமிநாதன் B. A. |
| செயலாளர்: | திரு. J. C. சார்ல்ஸ் |
| உப-செயலாளர்: | திரு. M. வைத்திலிங்கம் |
| தனாதிகாரி: | திரு. S. சிவப்பிரகாசம் B. Sc. |
| செயற்குழு: திருவாளர்கள் | J. C. அமரசிங்கம், A. C. சுந்தரம்பிள்ளை, A. M. K. குமாரசுவாமி, T, V. செல்லப்பா, V. R: இரத்தினம், M. E. சதாசிவம்பிள்ளை, A. பொன்னையா, P. தம்பு, V. A. ஜோன்பிள்ளை. |

## வெள்ளிவிழா ஆண்டின் நிர்வாகசபை 1958

| | |
|---|---|
| தலைவர்: | திரு. S. அம்பிகைபாகன் B. A. |
| உப-தலைவர்: | திரு. M. வைத்திலிங்கம் |
| செயலாளர்; | திரு. க. சுப்பையா B. A. |
| உப-செயலாளர்: | திரு. திரு. K. சோமசுந்தரம் |
| தனாதிகாரி: | திரு. C. வைரமுத்து B. A. |
| செயற்குழு: திருவாளர்கள்: | S. முருகேசு, K. நல்லதம்பி. V. V. கந்தையா E. ஆறுமுகம், S. சின்னரெத்தினம், M. பொன்னம்பலம், M. சின்னத்தம்பி, A. D. தம்பையா V. கந்தையா, R. சுந்தரம், A- இராசசிங்கம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபக நிர்வாகிகள்

FOUNDER OFFICIALS

தலைவர்
திரு J. W. அருட்பிரகாசம்



Mr. J. W. Arudpragasam B. A.,
( President 1933, 35, 40 — 45 )
( Treasurer 1936 — 39 )

செயலாளர்
திரு. J. C. சார்ல்ஸ்



Mr. J. C. Charles
( Secretary 1933 )

தனாதிகாரி
திரு. S. சிவப்பிரகாசம்



Mr. S. Sivapragasam B. Sc.,
( Treasurer 1933 — 35 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் விழா ஆண்டு

GOLDEN JUBILEE YEAR

உப தலைவர்
திரு. த. இராசேந்திரம்



Mr. T. Rajendram
( Vice President 1975 — 1983 )

உப செயலாளர்
திரு. அ. பஞ்சாட்சரம்



Mr. A. Panchadcharam
( Asst. Secy. 1978 — 1983 )

---

## முன்னாள் தலைவர்கள்

PAST PRESIDENTS

திரு. S. சுவாமிநாதன்



Mr. S. Swaminathan B. A.
( Vice President 1933, 35, 39, 41 — 45 )
( President 1934, 46 — 50 )

திரு. A. C. சுந்தரம்பிள்ளை



Mr. A. C. Sunderampillai B. Sc.
(Vice President 1936 — 38, 40, 46— 49)
( President 1939 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Golden Jubilee Message from the

President "Sahayamani" Mr. T. Visvanathan

I consider it a privilege to be President of the Northern Province Teachers' Provident Society at a time when it is celebrating its Golden Jubilee and it is with a sense of humility that I send this message. This society founded in 1933 and having its roots at the NPTA level is the oldest Teachers' Provident Fund in Sri Lanka. The Public Service Mutual Provident Association establihed in 1883 is the oldest Provident Fund in Sri Lanka So it had taken the teachers of North another fifty years to prepare the ground to establish our Northern Province Teacher's Provident Fund Society. It was in April 1978 that I took over the Presidentship of this Society. I recollect it was with a certain amount of reluctance that I accepted the post. The Financial position was pretty bad and the membership was falling. Certain changes in the working rules suggested by me were accepted unanimously by the Executive Committee and the members and thereafter our progress had been assured. In 1979 soon after the adoption of the new working rules we were able to enrole 69 members that year. This was a very healthy sign of our progress and I am glad to state that since then we have not locked back.

As one reviews our history the dark period has been from 1967 to 1973 when our reserves dropped from 3·9 lakhs to 1·6 lakhs. If not for this period our reserves would have gone up and we will be paying a much better Retirement Benefit. These days Foreign Banks which are housed in a room or two are able to make a net profit of thirty or forty million rupees annually. Also the Public Service Mutual Provident Association has a net reserve of more than thirty million rupees. So the stability and strength of such Funds or Societies or organisations depend upon the decision taken and the way they are implemented.

It may be added that even at the village level it is time to organise such Provident or Belevolent Funds. The organising unit could be a Village Headman's division or Ward or Temple Worshippers groups or some other group with common ideal or interest.

As far as our Fund is concerned we should endeavour to bring our Benefits to a Rs. 10,000/- limit by the time we celeberate our Diamond Jubilee. Those who joined the Fund after the recent changes in the costitution will be able to have their Retirement Benefits within a period of twenty years of membership. Thereafter quite a number of them ought to be able to continue their membership a second time and receive Benefits a second time. So attempts should be made by us to organise such Thrift Societies at grass root level.

During my period of Presidentship I am glad to note that the Executive Committee has been active enough and has been able to implement



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

our plans to schedule. I must personally thank Mr. S. Sivaraja our Secretary for his hard, genuine and continuous interest he has displayed in our affairs. The Treasurer, Mr. C. Gunapalasingbam too has been quite sincere in his work and monies with him have been as safe as with the Swiss Bank.

Please permit me in conclusion to extend my thanks and sense of appreciation to the Office Bearers of the Society and members of the N. P. T. P. S. for their continued co-operation and dedication. Let me not fail to express my sincere best wishes for the overall extension of the services of our organisation. It is my fervent hope that our Fund swell to gigantic proportions bringing comfort and hope not only to the members but to their nominees too.

**President's Supplementary Message**

The delay in the release of the Souvenir and the holding of the Golden Jubilee Celeberations calls of a supplementary message to that writeen by me in June 1983.

The unprecendantal Communal troubles of July 1983 made us to postpone the Golden Jubilee Celebrations fixed for August 1983 to early 1984.

In the Course of the Third term our Vice President, Mr. T Rajendram retired He has been one of the Senior most members of the Executive Committee and showed himself to be alive to the different situat. ions the society faced. His place of Vice Presidentship has been filled by another veteran Mr. A. Thambipillai who is silent, sober and does whatever is expected of him in time.

Later in early November our Treasurer, Mr Gunapalasingam wanted to be relieved of his work due to his ill health. As per our traditions the energetic Secretary, Mr S. Sivaraja was unanimously elected to take over this function. Personally I with him the very best in this most reponsible job of administering the Fund. Consequently our Assistant Secretary Mr. A. Panchadcharam has moved up as Secretary and the post of Assistant Secretary has been filled by Mr. V. M. Kuhanandah.

Better benefits and shorter period of contriubution has been the main problems concerning our members all the time. After studying up the various suggestions at our Annual General Meeting I recommended that the monthly subscription of members be stepped up to Rs. 15 - and the period of contribution to those members who joined after 1978 be made twenty years. I am glad that our Executive Committee has accepted both these resolutions unanimously.

I am confident that our Society too would accept it and that the members would co-operate in implementing it, so that a Retirement Benefit of Rs. 10,000/- for member becomes a reality soon.

Finally may I conclude by wishing our members and the Fund all success in years to come.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

# முன்னாள் நிர்வாகிகள் அட்டவணை

## 1933 — 1983

### Past officials of the Northern Province Teachers' Provident Society Ltd.

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1933 | திரு J. W. அருட்பிரகாசம் B. A. | திரு J. C. சார்ல்ஸ் | |
| 1934 | ,, S. சுவாமிநாதன் B. A. | ,, R. செல்லையா B. Sc. | திரு S. சிவப்பிரகாசம் B. Sc. |
| 1935 | ,, J. W. அருட்பிரகாசம் B. A. | ,, | ,, |
| 1936 | ,, J. C. அமரசிங்கம் B. A. | திரு P. தம்பு | ,, |
| 1937 | ,, | ,, | திரு J. W. அருட்பிரகாசம் B.A. |
| 1938 | ,, | ,, | ,, |
| 1939 | ,, A. C. சுந்தரம்பிள்ளை B. Sc. | திரு S. P. இராசையா | ,, |
| 1940 | ,, J. W. அருட்பிரகாசம் B. A. | ,, | ,, |
| 1941 | ,, | ,, | திரு. P. தம்பு |
| 1942 | ,, | ,, | ,, |
| 1943 | ,, | ,, | ,, |
| 1944 | ,, | ,, | ,, |
| 1945 | ,, | ,, | ,, |
| 1946 | திரு. S. சுவாமிநாதன் B. A. | திரு. C. வைரமுத்து B. A. | ,, |
| 1947 | ,, | ,, | ,, |
| 1948 | ,, | ,, | ,, |
| 1949 | ,, | ,, | ,, |
| 1950 | ,, | ,, | ,, |
| 1951 | திரு. ச. அம்பிகைபாகன் B. A. | ,, | ,, |
| 1952 | ,, | ,, | ,, |
| 1953 | ,, | ,, | ,, |
| 1954 | ,, | ,, | ,, |
| 1955 | ,, | ,, | ,, |
| 1956 | ,, | ,, | ,, |
| 1957 | ,, | ,, | ,, |
| 1958 | ,, | திரு க. சுப்பையா B. A. | திரு. C. வைரமுத்து B. A. |
| 1959 | ,, | ,, | ,, |
| 1960 | ,, | ,, | ,, |
| 1961 | ,, | ,, | ,, |
| 1962 | ,, | திரு க. சோமசுந்தரம் | திரு க. சுப்பையா B. A. |
| 1963 | ,, | ,, | ,, |
| 1964 | ,, | ,, | ,, |
| 1965 | ,, | ,, | ,, |
| 1966 | ,, | ,, | ,, |
| 1967 | ,, | ,, | ,, |
| 1968 | திரு க நல்லைதம்பி | திரு சே குணபாலசிங்கம் B. A. Dip. Ed | ,, |
| 1969 | ,, | ,, | ,, |
| 1970 | ,, | ,, | ,, |
| 1971 | திரு மு பொன்னம்பலம் | ,, | ,, |
| 1972 | ,, | ,, | ,, |
| 1973 | ,, | ,, | ,, |
| 1974 | ,, | திரு. சே. சிவராஜா B. Sc. Dip. Ed. | திரு. சே. குணபாலசிங்கம் B. A. Dip. Ed. |
| 1975 | திரு. இரா செல்வராஜா | ,, | ,, |
| 1976 | ,, | ,, | ,, |
| 1977 | ,, | ,, | ,, |
| 1978 | திரு. து விசுவநாதன் B. Sc. Dip. Ed. | ,, | ,, |
| 1979 | ,, | ,, | ,, |
| 1980 | ,, | ,, | ,, |
| 1981 | ,, | ,, | ,, |
| 1982 | ,, | ,, | ,, |
| 1983 | ,, | ,, | ,, |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

# முன்னாள் உபதலைவர்களும் உபசெயலாளர்களும்

## Past Officials of the N. P. T. P. S. Ltd.

## 1933 — 1983

| ஆ. | உபதலைவர் | உப செயலாளர் | ஆ. | உப தலைவர் | உப செயலாளர் |
|---|---|---|---|---|---|
| 1933 | திரு S. சுவாமிநாதன் B.A. | திரு. M. வைத்திலிங்கம் | 1959 | திரு. M. வைத்திலிங்கம் | திரு. K. சோமசுந்தரம் |
| 1934 | ,, A. C. சுந்தரம்பிள்ளை B.Sc. | ,, | 1960 | ,, | ,, |
| 1935 | ,, S. சுவாமிநாதன் B. A. | ,, | 1961 | ,, | திரு. M. சின்னத்தம்பி B. A. |
| 1936 | ,, A. C. சுந்தரம்பிள்ளை B Sc. | ,, | 1962 | திரு. K. நல்லதம்பி | ,, சு. முருகேசு |
| 1937 | ,, | ,, | 1963 | ,, | ,, |
| 1938 | ,, | திரு K. நவரத்தினம் | 1964 | ,, | ,, A. இராசசிங்கம் B Sc. |
| 1939 | திரு. S. சுவாமிநாதன் B. A. | ,, M. வைத்திலிங்கம் | 1965 | ,, | ,, சு. முருகேசு {Dip. Ed. |
| 1940 | ,, A. C. சுந்தரம்பிள்ளை B.Sc. | ,, K. தம்பாபிள்ளை பண்டிதர் | 1966 | ,, | ,, |
| 1941 | ,, S. சுவாமிநாதன் B. A. | ,, | 1967 | ,, | ,, |
| 1942 | ,, | ,, | 1968 | திரு S. மகேஸ்வர ஐயர் | ,, |
| 1943 | ,, | ,, | 1969 | ,, மு. பொன்னம்பலம் | ,, |
| 1944 | ,, | ,, | 1970 | ,, | திரு. இ. வேலாயுதம் |
| 1945 | ,, | ,, | 1971 | திரு. ஆ. சுப்பிரமணியம் | ஜனாப் M. A. C. M. ஹாலித் |
| 1946 | திரு A. C. சுந்தரம்பிள்ளை B. Sc. | திரு. M. வைத்திலிங்கம் | 1972 | ,, இரா. செல்வராஜா | ,, |
| 1947 | ,, | ,, | 1973 | ,, | ,, |
| 1948 | ,, | ,, | 1974 | ,, | திரு V. துரைச்சாமி |
| 1949 | ,, | ,, | 1975 | திரு த. இராசேந்திரம் | ,, வை. இரகுநாத முதலியார் [M. Sc. |
| 1950 | திரு. S. அம்பிகைபாகன் B. A. | திரு K. சோமசுந்தரம் | 1976 | ,, | ,, |
| 1951 | ,, M. வைத்திலிங்கம் | ,, | 1977 | ,, | ,, |
| 1952 | ,, | ,, M. சின்னத்தம்பி B. A. | 1978 | ,, | திரு அ. பஞ்சாட்சரம் |
| 1953 | ,, | ,, | 1979 | ,, | ,, |
| 1954 | ,, | ,, | 1980 | ,, | ,, |
| 1955 | ,, | திரு K. சோமசுந்தரம் | 1981 | ,, | ,, |
| 1956 | ,, | ,, | 1982 | ,, | ,, |
| 1957 | ,, | ,, | 1983 | ,, | ,, |
| 1958 | ,, | ,, | | | |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரும் பொருளாதாரமும்

திரு. ந. சபாரத்தினம் அவர்கள்
(முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி அதிபரும்; தொழிற்சங்க வாதியும்)

எழுத்தறிவித்தவனுக்கு 'பொருளாதாரம்' பொருத்தமில்லாத விடயம் என்று ஒருகாலமிருந்ததாகக் கேள்வி. தான் கற்றுணர்ந்த அறிவை விலைக்கு விற்பது தர்மமா எனக் கருதிய ஆசிரியர்கள் உரிய வேதனம் வாங்கத் தயங்கிய காரணத்தால் சமூகம், இவர்களை ஒருவித தேவர்களாக்கி; விசேட தினங்களில் நிவேதனம், கை விசேஷம் முதலியவற்றை வழங்கி வந்தது. மாதச் சம்பளம் என்ற பேச்சேயில்லாத காலமொன்றிருந்தது.

இந்த அடிப்படை நியாயமே நீண்டகாலம், ஆசிரியர் தமக்குரிய வேதனத்தைப் பெறுது போவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தது. சீடர்கள் குருவென ஆசிரியரைப் போஷிக்கவேண்டும்; அவ்வளவுதான்.

சமூக மாற்றம் சடுதியாக வந்ததும் ஆசிரியர் ஏழ்மைக்குத் தள்ளப்பட்டனர். தம்மை ஒறுத்து, தம் மாணவரைக் கற்பித்தல் என்பது துறவிக்கே இயலாத காலம் வந்தது. உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு, பெற்றோருக்கு பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு— இவையெல்லாம் உழைப்பில் தங்கியிருந்த காலம், அலை மோதிக் கொண்டிருந்தது. ஆசிரியர் வாழ்வில், இப்போக்கில் திசைதிருப்பப்பட்டதே அக்கூட்டம் பொருளாதாரத்தைப் பொறுப்புடன் சிந்திக்க முடியாத காரணமாகும். மேலும் ஆசிரியர் மட்டுமே தம்மை, அப்பணிக்குப் பொறுப்புடையவர் என்ற மயக்கமுமே காரணமாகும். மாதச்சம்பள மென்ற தொழிலமைப்பில், குறிக்கப்பட்ட சம்பளம் பெறுது முகாமையாளருடன் சண்டை போடக் காலம் உதயமானதும் ஆசிரியர் வாழ்க்கை நடத்த ஒருவழி ஏற்பட்டது. "இந்தப் பிச்சைச் சம்பளத்தைக் கொண்டு என்ன செய்யலாம்?" என்ற சமூகத்தின் ஒற்றுமைப்பட்ட பிரலாபமே, சகாயநிதி யென்ற பொது அமைப்புகளுக்கு வழிவகுத்தன். அமரர் கன்னங்கராவின் இலவசக் கல்வி, மாதச்சம்பளத்துக்கு ஒரு கோட்டையாக அமைந்தது.

இத்தகைய சங்கமொன்று பொன் விழாக் காண்பது மகிழ்ச்சிக் குரியது. இன்றைய ஆசிரியரின் பொருளாதாரம் 50 வருடத்திற்கு முன் இருந்த நிலைக்கு வேறுபட்டதாகும். ஏழ்மையும் சிக்கனமும் நிரம்பியவாழ்வு அக்கால வாழ்வு. ஒருவித மனத்திருப்தியும், மதிப்பும் இருந்ததால், இன்றைய பொருளாதாரத்திற்குப் பொருள் சொல்வது கடினமே.

இன்று சில ஆசிரியர்கள் இல்லத்திற்கு, வருமானவரி இலாகா இரகசியத்தீடீர் சோதனையிடுகின்றனர். சிலரை மடக்கிப் பிடித்து வருவதாகவும் செய்தி. இந்த "மதிப்பு" ஆசிரியர் சமூகத்திற்கு ஏழை ஆசிரியர் சமூகத்திற்கு —என்றுவது கிட்டுமா என்று நாம் கனவிலும் கண்டதில்லை. எம்மத்தியில் இவ்விதமானோர் உண்டெனினும் திருப்தியாக மதிப்பாக வாழ்கின்றனரா? மேம்பட்ட ஆசிரியர் தொழிலில், சமூகத்தின் கணிப்பில், 'உபாத்தியாயர்' என்ற கௌரவம் கிடைக்கின்றதா? எனவே பொருளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரம், பொருளில் மட்டும் பொறுத்திருக்கவில்லை என்பதை மறந்து, பொருள் தேடுவதில் என்ன அர்த்தமோ வென்று கருத்துத் தெரிவிப்பவர்கள், ஞானிகள் அல்லது உழைத்துப் பிழைக்கத் தெரியாத சோம்பேறிகளே. இந்த இரண்டாவது கூட்டத்தினர் பலர் ஆசிரியத் தொழிலில் கூச்சமின்றி இறங்குவதைப் பார்த்து அறிஞர் ஷா விடுத்த கண்டனம், ஆசிரியர் சமூகத்திற்கு இன்றும் சவாலாக உள்ளது. அவருடைய ஆங்கிலக் குறள் எங்கள் மார்பைப் பிளந்து விடுகின்றது வள்ளுவருக்கே சவாலாகிறது. If You Can, Do; If You Can't, Teach!

ஷா வம்பளப்பது மெய்; இருந்தும் இந்த உண்மையை, உணர்ந்த பெரியோர் பலர் இத் தொழிலை (தொழிலா?) விட்டு வேருெத்த பதவிகளில் உயர்ந்திருக் கின்றனர். பெரும்பதவிகளை விரும்பாதவர் தென்னந்தோட்டச் சொந்தக்காரராய் வரமுடியுமானுல், இன்று அவருடைய பொருளாதார நிலை, அவர்களின் பெண் மக்களுக்கு எந்தப் பெரும் புள்ளியையும் கணவனுக விலைக்கு வாங்கும் ஆற்றலைப் பெறமுடியும். பல ஆசிரியர் இவ்வாறு சிந்தித்து, மனத்தில் கோட்டை அமைத்து, தொழிலை விட்டு விட்டு வெளியேறி, பொருளாதாரத்தையும், மதிப்பையும் கூட உயர்த்த முடிந்தபோதும். ஆசிரியப்பணியை "என் கடன்" என்ற மன உறுதி கொண்ட சமூகம் இருக்கவே இருக்கின்றது. தம்முடைய வருவாயை அதிகரிக்க, சேமிக்கும் பயிற்சியை அங்கத்தவருக்கு அளிக்கவேண்டுமென்ற காரணத்தால் ஆசிரியர் சகாயநிதிச் சங்கங்கள் நிறுவப்பட்டன, பண்பும் தியாக உணர்வும் கொண்ட பெரி யோர் இவற்றை உருவாக்கினர்.

அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளில், இத்தகைய சங்கங்கள் பெரும் அற்புதங்களை நிகழ்த்தியிருக்கின்றன. வானளாவும் ஹோட்டல்களை அமெரிக்கத் தேசிய ஆசிரியர் சங்கம் [NTA] நடத்தி வருவது பலருக்குத் தெரியாததாகும். இலட்சக் கணக்கில் அங்கத்தவர்களைக் கொண்ட இச் சங்கம் மிகப்பலம் பெற்றதாகும். ஆனுலும் அமெரிக்கச் சமூகத்தில் ஆசிரியர் வருமானம் குறைந்த மட்டத்திலேயே வாழ் கின்றனர். இது ஒரு Profession அல்ல Procession என்ற கிண்டலும் அந்தக் குபேர நாட்டில் தான் பிறந்தது. கல்விக்குரிய தெய்வம் சரஸ்வதியும் செல்வத்துக்குரிய இலக்குமியும் இருவேறு உலகத்தைப் படைத்து பரிபாலனம் செய்வது, மேனுட்டிலும் காணக்கூடிய தொன்று என்று நாம் மனத்தளர்ச்சி யடையலாகாது. அதேபோல் எப்பாடுபட்டும் எக்கேடுகெட்டும் பொருளைத் திரட்ட வேண்டுமென்று எமது தெய் வீகப்பணியையும் அலட்சியம் செய்யலாகாது.

இது வெறும் தத்துவமல்ல, பொருளாதார சாத்திரத்துக்கு முரண்பட்டதால், அதற்கு அப்பாற்பட்டது. செய்யும் தொழிலே தெய்வமென்ற நம்பிக்கையுடன், வறு மையுடன் போராடித் தம்மை அர்ப்பணித்த தொழிலாளரின் — ஆசிரியர் உட்பட — குடும்பங்களின் வரலாறுகாட்டும் உண்மை, இன்றைய பொருளாதார நுணுக்கங்களைத் தூக்கியெறிகின்றது,

ஆசிரியர் தம்மக்கள் தம்மைப்போல் "மட்டையடிக்கப்'' படாதென விரும்பி தம்மைத் தொழிலுக்கு அர்ப்பணிக்கும் ஆசிரியரின் எச்சங்கள் உலகளவிய முறையில் உயர்ந்த பண்புடைய ஸ்தானத்தை எட்டிப்பிடிக்க முடிகிறதென்ருல் அத்தகைய குடும் பத்தின் பொருளாதாரம் இருந்த வரலாறென்னே! காசுதான் எல்லாம் செய்யவல் லதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பொன்விழாக் காணும் வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம் எங்கள் காலத்தில் தம்பு மாஸ்டர் சங்கமென அழைக்கப்பட்டது. அதற்கு முன்னுள்ள பெரியோரால் நிறுவப்பட்டது உண்மையே. சகாயநிதிச் சங்கமென்றுலென்ன சாதாரண ஆசிரியர் சங்கமென்றுலென்ன — யாழ்ப்பாணத்தின் சிறந்த பொருள்களில் ஒன்று என அகில இலங்கையிலும் மதிப்பிருந்துவந்தது.

ஆசிரியர் தொழிலில் மேன்மைபெற்றவர்களும் நாணயமிக்கவர்களுமே, இவ்வித பொறுப்பான சேவைக்குத் தெரிவு செய்யப் பட்டனர், தெரிவுசெய்யப் படுகின்றனர். மேலும் அவர்கள், அவர்களுக்குப்பின் தலைமைதாங்கும் தகமையுடையவர்களைப் பயிற்றியும் வந்தனர். தளப்பமின்றி இச்சேவை தொடர்கிறது,

நீண்டகாலமாகத் திறமையாகவும், நேர்மையாகவும் நடத்திவந்த பெரியார்களில் (யாழ். இந்து) தம்புமாஸ்டர் குடும்பத்தையே சங்கத்தின் சிறப்புக்கு உதாரணமாகக்கொள்ளலாம். அப்பெரியாருக்கு முன்னரும், பின்னரும் பலபெரியார்கள் நிர்வாகிகளாக இருந்து இதனை இன்றைய நிலைக்கு உயர்த்திவந்தமை, ஆசிரிய சமூகத்திற்கு ஒரு பெருவெற்றியாகும்,

**வாழ்க வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்.**


# Pioneers in the field

**Northern Province Teachers' Provident Society Ltd.**

Membership open to all teachers from all over the country under 45 years of age
(according to the number of vacancies available)

Are you a member?

If not join now and Provide yourself for you and yours

RETIREMENTS BENEFITS!

DEATH BENEFITS!!

LOAN BENEFITS!!!

Hundreds of Teachers have availed these benefits and why not you?

For entry forms, rules etc.,

*Please apply to the*

Secretary: N. P. T. P. S. Ltd.,
12, Kadaichamy Road,
Neeraviady,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச்சங்கம்

## திரு. க. நல்லதம்பி அவர்கள்

(இளைப்பாறிய அதிபரும், முன்னாள் தலைவரும்)

அரசாங்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உரிய உரிமைகள் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிற் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இல்லை. இதனால் விதவை அநாதைப் பென்சன் இவ்வாசிரியர்களின் மனைவி மக்களுக்குக் கிடையாது. இதனை உணர்ந்த நல்லாசிரியர் பலர் ஒருங்குகூடி ஆலோசித்து 1-7-33 இல் வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம் என ஒன்றை உருவாக்கினர். ஆண்டுதோறும் பலர் உறுப்பினராகச் சேர்ந்தனர். இச்சங்கம் அன்று தொடங்கி இன்றுவரை படிப்படியாக வளர்ச்சிபெற்று ஆசிரிய சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவை அளப்பரியதாகும். இதனைச் சங்க நிர்வாகசபையினர் ஆண்டுதோறும் வெளியிடும் அறிக்கை மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாகவிருக்கின்றது.

நான் 1933 — 1970 வரை இச்சங்க உறுப்பினராக இருந்தேன். இக்காலத்தில் இடையிடையே நிருவாகசபை உறுப்பினராகவும் உபதலைவராகவும் ஈற்றில் தலைவராகவும் இருந்து சேவை செய்தேன்.

